

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (31.1.2026) சிவகங்கை மாவட்டம், காரைக்குடியில், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் சார்பில், சிவகங்கை மாவட்டத்தில் 2119 கோடியே 7 இலட்சம் ரூபாய் செலவில் 8 பேரூராட்சிகள், 11 ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள 2452 ஊரகக் குடியிருப்புகள் மற்றும் 3 நகராட்சிகளில் காவிரி ஆற்றை நீராதாரமாகக் கொண்ட மாபெரும், கூட்டுக் குடிநீர் திட்டத்தை தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில், அமைச்சர்கள் கே.என். நேரு, எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், தங்கம் தென்னரசு, எஸ். இரகுபதி, கே.ஆர். பெரியகருப்பன், ஆர்.எஸ். ராஜகண்ணப்பன், சிவ.வீ. மெய்யநாதன், முனைவர் டி.ஆர்.பி. ராஜா, ஒன்றிய முன்னாள் அமைச்சரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ப. சிதம்பரம், நாடாளுமன்ற உறுப்பினர் கார்த்தி ப. சிதம்பரம், சட்டமன்ற உறுப்பினர்கள் திருமதி ஆ.தமிழரசி, மாங்குடி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (31.1.2026) சிவகங்கை மாவட்டம், காரைக்குடியில் நடைபெற்ற அரசு விழாவில், பல்வேறு துறைகளின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள அரங்குகளை பார்வையிட்டார். இந்நிகழ்ச்சியில், அமைச்சர்கள் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (31.1.2026) சிவகங்கை மாவட்டம், காரைக்குடியில் நடைபெற்ற அரசு விழாவில், மாற்றுத்திறனாளிகளுக்கு இணைப்புச் சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்களை வழங்கினார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (31.1.2026) சிவகங்கை மாவட்டம், காரைக்குடியில், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் சார்பில், சிவகங்கை மாவட்டத்தில் 2119 கோடியே 7 இலட்சம் ரூபாய் செலவில் 8 பேரூராட்சிகள், 11 ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள 2452 ஊரகக் குடியிருப்புகள் மற்றும் 3 நகராட்சிகளில் காவிரி ஆற்றை நீராதாரமாகக் கொண்ட மாபெரும் கூட்டுக் குடிநீர் திட்டத்தை தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில், அமைச்சர்கள் கே.என். நேரு, எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்,கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், தங்கம் தென்னரசு, எஸ். இரகுபதி, கே.ஆர். பெரியகருப்பன், ஆர்.எஸ். ராஜகண்ணப்பன், சிவ.வீ. மெய்யநாதன், முனைவர் டி.ஆர்.பி. ராஜா, ஒன்றிய முன்னாள் அமைச்சரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ப. சிதம்பரம், நாடாளுமன்ற உறுப்பினர் கார்த்தி ப. சிதம்பரம், சட்டமன்ற உறுப்பினர்கள் திருமதி ஆ.தமிழரசி, மாங்குடி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### மெக்சிகோ, இத்தாலி, பிலிப்பைன்ஸ் நாடுகளுக்கு நிகராக

# தமிழ்நாட்டின் வளர்ச்சி வலுவாக உள்ளது!

### ஆய்வறிக்கையில் தகவல்!

புதுடெல்லி, பிப்.1-

மெக்சிகோ, இத்தாலி, பிலிப்பைன்ஸ் நாடுகளுக்கு நிகராக விகிதாச்சாரத்தில் பல துறைகளில் தமிழ்நாடு முன்னோடி மாநிலமாக திகழ்வதாக ஆய்வறிக்கை தெரிவித்துள்ளது.

வளர்ந்த நாடுகளுடன் ஒப்பிடும்போது, தமிழ்நாட்டின் வளர்ச்சி வலுவாக உள்ளதாக ஆய்வறிக்கை ஒன்று தெரிவித்துள்ளது. அனைத்துத் துறைகளிலும் இந்தியாவிலேயே தமிழ்நாடு முன்னிலை வகிப்பதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டின் மக்கள் தொகை 7.73 கோடி, தாய்லாந்தின் மக்கள் தொகை 7.17 கோடி, பெரிய அளவிலான நிர்வாகத் திறனை இது காட்டுகிறது. தமிழ்நாட்டின் நிலம் மற்றும் அடர்த்தி ஒரு லட்சத்து 30 ஆயிரத்து 60 சதுர கி.மீ., கிரேக்க நாட்டின் நிலஅளவு ஒரு லட்சத்து 31 ஆயிரத்து 990 சதுர கிமீ. தமிழ்நாட்டு மருத்துவத்துறையில் 10 ஆயிரம் பேருக்கு 19 மருத்துவர்கள், வியட்நாமில் 10 ஆயிரம் பேருக்கு 11 மருத்துவர்கள், இதிலும் தமிழ்நாடு முன்னணியில் உள்ளது.

பிறப்பு இறப்பு விகிதம் தமிழ்நாட்டில் 35 ஆகவும், மெக்சிகோவில் 42 ஆகவும் உள்ளது. தமிழ்நாட்டின் தனிநபர் வருமானம் 3 ஆயிரத்து 950 டாலராகவும், பிலிப்பைன்ஸ் நாட்டில் தனி நபர் வருமானம் 3 ஆயிரத்து 985 டாலராகவும் உள்ளது. இத்தாலியில் பணிபுரியும் பெண்களின் எண்ணிக்கை 41 சதவீதம், ஆனால் தமிழ்நாட்டில் 41.5 சதவீதமாக உள்ளது.

பொருளாதார நோபல் பரிசு பெற்ற அமர்த்தியா சென் கூட, “சுதந்திரமாக வளர்ச்சி” என்ற புத்தகத்தில், தமிழ்நாடு போன்ற மாநிலங்கள் எவ்வாறு அதிக வருமானம் கொண்ட நாடுகளை ஒத்த சமூக நிலைபாடுகளைக் கொண்டுள்ளன என்பதைக் குறிப்பிட்டுள்ளார். சமூக நீதி மற்றும் நிலையான முதலீடு ஆகியவை ஒரு நாட்டின் மாநிலத்திலிருந்து உலகளாவிய தரத்தை வழங்க முடியும் என்பதை இந்த ஆய்வறிக்கை மூலம் தமிழ்நாடு நிரூபித்துள்ளது.

### மகாத்மாகாந்தி ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தைத் தொடர்ந்து

# தகவல் அறியும் உரிமைச் சட்டத்தையும் சிதைக்க முயற்சி!

### ஒன்றிய அரசு மீது மல்லிகார்ஜுன கார்கே குற்றச்சாட்டு!



புதுடெல்லி, பிப்.1-

மகாத்மா காந்தி ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தைத் தொடர்ந்து, தற்போது, தகவல் அறியும் உரிமைச் சட்டத்தையும் சிதைக்க ஒன்றிய அரசு முயற்சித்து வருவதாக காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே குற்றம்சாட்டியுள்ளார்.

இதுதொடர்பாக, சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள மல்லிகார்ஜுன கார்கே, தகவல் அறியும் உரிமைச் சட்டத்தை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என பொருளாதார ஆய்வறிக்கை கூறியுள்ளதாக தெரிவித்துள்ளார். மோடி அரசு தகவல் அறியும் உரிமைச் சட்டத்தை தொடர்ந்து பல வீனப்படுத்தி வருவதாகவும், 2023ம் ஆண்டின் டிஜிட்டல் தனிநபர் தரவுப் பாதுகாப்புச் சட்டம், தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் பொது நலன் பிரிவைச் செயலிழக்கச் செய்து, ஊழலை மறைக்கவும், ஆய்வுகளைத் தடுக்கவும் தனியுரிமையை ஒரு ஆயுதமாகப் பயன்படுத்தியதாகவும் கார்கே குறிப்பிட்டுள்ளார். கடந்த டிசம்பர் 2025 வரை, மத்திய தகவல் ஆணையம் தலைமைத் தகவல் ஆணையர் இல்லாமல் செயல்பட்டு வந்ததாகவும், கடந்த 11 ஆண்டுகளில் இந்த முக்கியப் பதவி வேண்டுமென்றே காலியாக வைக்கப்பட்டது. இது ஏழாவது முறை என்றும் கார்கே குறிப்பிட்டுள்ளார். 2014 முதல், 100க்கும் மேற்பட்ட தகவல் அறியும் உரிமை ஆர்வலர்கள் கொல்லப்பட்டுள்ளதாகவும் அவர் குற்றம்சாட்டியுள்ளார். மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தைக் கொன்ற பிறகு, இப்போது தகவல் அறியும் உரிமைச் சட்டத்தைக் கொலை செய்வதற்கான முறை வந்துவிட்டதா என்றும் கார்கே வினவியுள்ளார்.

### கணினி மயமாக்கலின் விளைவாக வேலைவாய்ப்புகள் குறைந்து வருவதையும்

# வேலை வாய்ப்பின்மை அதிகரித்து வருவதையும் தடுத்திட ஏதேனும் திட்டங்கள் உள்ளதா?

### மாநிலங்களவையில் எஸ். ஆர். சிவலிங்கம் கேள்வி!



புதுடெல்லி, பிப்.1-

மாநிலங்களவை உறுப்பினர், எஸ். ஆர். சிவலிங்கம் அவர்கள் 29 ஜனவரி 2026 அன்று மாநிலங்களவையில் தனியார் துறைகளில், கணினி மயமாக்கல் விளைவாக, வேலை வாய்ப்புகள் தொடர்ந்து குறைந்து வருவது பற்றி தகவல்கள், ஒன்றிய அரசின் கவனத்தில் வந்துள்ளதா? என்றும், வேலை வாய்ப்பின்மை அதிகரித்து வருவதை அரசு அறியுமா? என்றும், இவற்றை தடுத்து நிறுத்திட ஒன்றிய அரசிடம் ஏதேனும் திட்டங்கள் உள்ளனவா, என்றும் அதன் விவரங்களை மேலவை உறுப்பினர்களுக்கு தெரிவிக்க இயலுமா? என்று ஒன்றிய அரசின் வேலை வாய்ப்புத்துறையின் இணையமைச்சர் திருமதி ஷேபா கரந்த்லேகர் அவர்களிடம் விரிவான கேள்வி எழுப்பினார்.

இதற்கு அரசின் வேலை வாய்ப்புத்துறையின் இணையமைச்சர் அவர்கள் அளித்த பதில் வருமாறு:

ஒன்றிய அரசின் புள்ளியல் மற்றும் திட்ட அமலாக்கத்துறையின் கீழ், வருடாந்திர தொழிலாளர் ஆய்வறிக்கை வெளியிடப்பட்டு வருகிறது என்றும், அந்த அறிக்கையின்படி, கடந்த 2023-24ம் நிதி யாண்டிற்கும் ஆன வேலை வாய்ப்பின்மை மூன்று சதவீதமாக குறைக்கப்பட்டுள்ளது என்றும், தொழிலாளர் மற்றும் மக்கள் தொகை விகிதம் கடந்த 2023-24ம் நிதியாண்டில் 58 சதவீதம் என்ற அளவிற்கு அதிகரித்துள்ளது என்றும், இணையமைச்சர் மேலவையில் தெரிவித்தார்.

மேலும், செயற்கை நுண்ணறிவு தொழில் நுட்பம், மற்றும் கணினி மயமாக்கலின் விளைவாக புதிய வேலை வாய்ப்புகள் கணிணி பயன்பாட்டு துறைகளில் உருவாக்கப்பட்டுள்ளன என்றும், திறன் மேம்பாடுகளில் தொடர்ந்து ஒன்றிய அரசு கவனம் செலுத்தி வருவதால் தொழிலாளர்களுக்கான திறன் தரப்பட்டுள்ளது என்றும், இதற்கான சட்ட விதிகளை, ஒன்றிய அரசு, பாரதிய குடிமக்கள் பாதுகாப்பு சட்டம் 2023ன்படி உறுதி செய்துள்ளது என்றும், சட்டத்தை மீறும் தனியார் நிறுவனங்களுக்கு சிறைத் தண்டனை, அல்லது அபராதம் அல்லது இரண்டிற்கும் ஆன வழிகாட்டு நெறிமுறைகளை ஒழுங்குமுறை ஆணையத்தின் கீழ், சாந்தி சட்டத்தின் படி, ஒன்றிய அரசு வழங்கிட ஆவன செய்யப்பட்டுள்ளதாக ஒன்றிய அரசின் வேலை வாய்ப்புத்துறையின் இணையமைச்சர் திருமதி ஷேபா கரந்த்லேகர் மாநிலங்களவையில் எஸ். ஆர். சிவலிங்கம் எழுப்பிய கேள்விக்கு விரிவான பதிலை அளித்துள்ளார்.

### புதுச்சேரியில்

# அனைத்துத் தொகுதிகளிலும் உதயசூரியன் உதிக்க வேண்டும்!

### கழகத்தில் இணைந்த வன்னியர் பாதுகாப்பு இயக்கத்தினரை வரவேற்று எஸ். ஜெகத்ரட்சகன் எம்.பி. பேச்சு!



புதுச்சேரியில் கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் எஸ். ஜெகத்ரட்சகன் எம்.பி. முன்னிலையில் வன்னியர் பாதுகாப்பு இயக்கத் தலைவர் செந்தில் தனது ஆதரவாளர்களுடன் கழகத்தில் இணைந்தார். உடன் மாநில கழக அமைப்பாளர் ஆர். சிவா எம்.எல்.ஏ. மற்றும் நிர்வாகிகள் உள்ளனர்.

புதுச்சேரி, பிப்.1-

வன்னியர் பாதுகாப்பு இயக்க தலைவர் செந்தில் தமது ஆதரவாளர்களுடன் ஜெகத்ரட்சகன் எம்.பி., முன்னிலையில் திமுக-வில் இணைந்தார்.

புதுச்சேரி மாநில வன்னியர் பாதுகாப்பு பேரியக்க நிறுவனத் தலைவர் செந்தில் என்கின்ற ரமேஷ் தமது ஆதரவாளர்கள் 500 பேருடன் திமுக-வில் இணையும் நிகழ்ச்சி அக்கார்டு ஹோட்டலில் நேற்று காலை நடைபெற்றது.

புதுச்சேரி சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் இரா. சிவா தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், வன்னியர் பாதுகாப்பு பேரியக்க நிறுவனத் தலைவர் செந்தில் என்கின்ற ரமேஷ் தமது ஆதரவாளர்கள் மாநில செயலாளர் முருகன், இளைஞர் அணித் தலைவர் பூவரசன், செயற்குழு உறுப்பினர்கள் ராஜேந்திரன், சண்முகம், காளி, சரவணன், ஜெயராமன், பாலமுருகன், விக்னேஷ்வரன், பரசுராமன், பூபாலன், இளைஞர் அணிச் செயலாளர் அன்பரசு, கண்ணன், கோபால், கதிர் உள்ளிட்ட 500 பேர் திமுக கொள்கைப் பரப்புச் செயலாளர் ஜெகத்ரட்சகன் எம்.பி முன்னிலையில் திமுக-வில் இணைந்தார். திமுக-வில் இணைந்தவர்களுக்கு பொன்னாடை அணிவித்து, உறுப்பினர் படிவம் வழங்கப்பட்டது.

நிகழ்ச்சியில் ஜெகத்ரட்சகன் எம்.பி. பேசியதாவது:

தி.மு.க. தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு தமிழ்நாட்டைபோல் புதுச்சேரியில் வளிமையான ஒரு அரசை அமைக்க வேண்டும் என்பதுதான். புதுச்சேரியின் வளர்ச்சிக்கு தலைவர் தம்மை அர்ப்பணித்துள்ளார். திராவிட முன்னேற்றக் கழகத்தின் வளர்ச்சி அசூர வளர்ச்சி. புதுச்சேரியின் வரலாற்றில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் பங்கு பெரியது. தமிழ்நாட்டில் தொழில்துறை, வேலை வாய்ப்பில் மிகப்பெரிய வளர்ச்சி அடைந்துள்ளது. தேர்தல் வருவதற்கு இன்னும் ஒரு மாதம் தான் இருக்கிறது. புதுச்சேரியில் உள்ள அனைத்து தொகுதிகளிலும் பம்பரமாக சுழன்று பணியாற்றி வளமான, வலிமையான புதுச்சேரியை உருவாக்க வேண்டும் என்பதே தலைவரின் லட்சியம். புதுச்சேரில் உள்ள அனைத்து தொகுதிகளிலும் சூரியன் உதிக்க வேண்டும். கூட்டணியை தலைவர் பார்த்துக்கொள்வார். கழகத்தில் இணைந்த செந்தில் அவர்களுக்கு தலைவர் அவர்கள் நல்ல இடத்தை உறுதியாக கொடுப்பார்.

இவ்வாறு அவர் பேசினார்.

இந்த இணைப்பு நிகழ்ச்சியில், தி.மு.க. அவைத்தலைவர் எஸ்.பி. சிவக்குமார், மாநில துணை அமைப்பாளர் வி. அனிபால் கென்னடி எம்.எல்.ஏ., பொருளாளர் இரா. செந்தில்குமார் எம்.எல்.ஏ., மாநில இளைஞர் அணி அமைப்பாளர் எல். சம்பத் எம்.எல்.ஏ., துணை அமைப்பாளர் தைரியநாதன், பொதுக்குழு உறுப்பினர்கள் எஸ். கோபால், வே. கார்த்திகேயன், தொகுதி செயலாளர்கள் ப.வடிவேல், இரா. சக்திவேல், கோ. தியாகராஜன் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

### உஜ்வாலா யோஜனா திட்டத்தின் கீழ்

# தமிழ்நாட்டில் செயல்படும் எல்.பி.ஜி.இணைப்புகள் எண்ணிக்கை எவ்வளவு?

### மக்களவையில் தே. மலையரசன் கேள்வி!



புதுடெல்லி, பிப். 1 -

கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற உறுப்பினர் தே. மலையரசன் நாடாளுமன்றத்தில் எழுப்பிய கேள்வி வருமாறு:-

தமிழ்நாட்டில் மாவட்ட வாரியாக பிரதான் மந்திரி உஜ்வாலா யோஜனாவின் கீழ் செயல்படும் மற்றும் செயல்பாட்டு எல்பிஜி இணைப்புகளின் எண்ணிக்கை எவ்வளவு?

குறிப்பாக கிராமப்புற மற்றும் தொலைதூரப் பகுதிகளில் சரியான நேரத்தில் மற்றும் மலிவு விலையில் எரிவாயு நிரப்புதலை உறுதி செய்ய ஒன்றிய அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன?

பயனாளிகளிடையே பாதுகாப்பான பயன்பாட்டு சலுகைகள் மற்றும் மானியத் திட்டங்கள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் என்ன?

PMUY இணைப்புகளின் பயன்பாட்டைக் கண்காணிக்கவும் தவறாகப் பயன்படுத்துவதைத் தடுக்கவும் ஏதேனும் வழிமுறை உள்ளதா, அப்படியானால் விவரங்கள் என்ன?

பெண்கள் மற்றும் விளிம்புநிலை சமூகங்களுக்கான நன்மைகளை அதிகரிக்க pmuy ஐ பிற நலத்திட்டங்களுடன் இணைக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன?

இவ்வாறு அவர் கேள்வி எழுப்பினார்.